**செய்தி வெளியீடு எண்: 274** **நாள்: 03.05.2019**

தொழில் நுட்பக் கல்வி இயக்ககத்தின் கட்டுப்பாட்டில் உள்ள கீழ்க்காணும் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பொறியியற் கல்லூரிகளில் **2019–20** ஆம் கல்வியாண்டிற்கு தகுதி வாய்ந்த பட்டயப் படிப்பு முடித்து பணிபுரியும் விண்ணப்பதாரர்களுக்கு பகுதிநேர பி.இ. / பி.டெக். பட்டப் படிப்புகளுக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

1. அரசினர் பொறியியற் கல்லூரி, கோயம்புத்தூர் – 641 013
2. அரசினர் பொறியியற் கல்லூரி, சேலம் – 636 011
3. அரசினர் பொறியியற் கல்லூரி, திருநெல்வேலி – 627 007
4. அழகப்ப செட்டியார் அரசு பொறியியல் மற்றும் தொழில்நுட்ப கல்லூரி, காரைக்குடி – 630 004
5. தந்தை பெரியார் அரசினர் பொறியியற் கல்லூரி, வேலூர் – 632 002
6. அரசினர் பொறியியற் கல்லூரி, பர்கூர் – 635 104
7. பி.எஸ்.ஜி. பொறியியற் கல்லூரி, கோயம்புத்தூர் – 641 004
8. கோயம்புத்தூர் இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜி, கோயம்புத்தூர் – 641 014
9. தியாகராஜர் பொறியியற் கல்லூரி, மதுரை – 625 015

**தகுதி :** i) விண்ணப்பதாரர் விண்ணப்பிப்பதற்கான கடைசி நாளன்று பட்டயப் படிப்பு முடித்து இரண்டு ஆண்டுகள் முழுமையாக நிறைவு பெற்றிருந்தால் மட்டுமே விண்ணப்பிப்பதற்கு தகுதியுடையவராவர்.
ii) விண்ணப்பதாரர் பணிபுரிபவராகவும், குறைந்தபட்சம் இரண்டு ஆண்டுகள் பணிபுரிந்திருக்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| 1) | விண்ணப்பிக்கும் முறை | விண்ணப்பதாரர் www.ptbe-tnea.com என்ற இணையதள வாயிலாக விண்ணப்பித்தல் வேண்டும்.<br>ஆன்–லைன் மூலமாக விண்ணப்பிப்பதற்கு<br>**1)** விண்ணப்பதாரர் தேவையான சான்றுகளுடன் ஆன்–லைன் மூலமாக மட்டுமே விண்ணப்பித்தல் வேண்டும்.<br>**2)** ஆன்–லைன் மூலமாக விண்ணப்பித்த பின்பு அதை பிரதி எடுத்து உரிய ஆவணங்கள் மற்றும் பதிவுக் கட்டணத்துடன் அனுப்பி வைத்தல் வேண்டும். |
| 2) | விண்ணப்பப் படிவம் கிடைக்கும் நாள் | ஆன்– லைன் மூலமாக விண்ணப்பங்கள் பதிவு செய்யும் நாள்<br>துவங்கும் நாள் : 06.05.2019<br>முடிவுறும் நாள் : 04.06.2019, 5.00 மணி வரை |
| 3) | பதிவுக் கட்டணம் | விண்ணப்பதாரர் ரூ.**600/–** (ஆதிதிராவிடர் / பழங்குடியின மாணவர்களுக்கு ரூ.**300/–**)க்கான கேட்பு வரைவோலையினை **(06.05.2019–க்கு முன்னர் பெற்றிருக்கக் கூடாது.)** “The Secretary, Part Time B.E. / B.Tech. Admissions, Coimbatore”, Payable at Coimbatore என்ற பெயரில் பெற்று பதிவுக் கட்டணமாக விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். பதிவுக் கட்டணத்திற்கான கேட்பு வரைவோலையின்றி பெறப்படும் விண்ணப்பங்கள் காரணமின்றி நிராகரிக்கப்படும். |
| 4) | விவரங்கள் | மேலும் விவரங்கள் அறிய **www.ptbe-tnea.com** இணையதள முகவரியில் **“INFORMATION AND INSTRUCTIONS TO CANDIDATES”** பக்கத்தில் பார்க்கவும். |

பூர்த்தி செய்யப்பட்ட படிவங்கள் பதிவுக் கட்டணத்துடன் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

**The Secretary, Part Time B.E. / B.Tech. Admissions,**
**Coimbatore Institute of Technology,**
**Civil Aerodrome (PO), Coimbatore - 641 014.**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**